

ஜனாதிபதி
தேர்தல் 2024

# மக்களின் அபிலாஷைகள்

# ஜனாதிபதி தேர்தல் 2024
# மக்கள் அபிலாஷைகள்

நாட்டின் தேர்தல் தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு மதிப்பளித்து, தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களுக்கு இணங்க, இந்த அறிக்கையில் உள்ள சில கண்டுபிடிப்புகள் நீக்கப்பட்டுள்ளன.
வாசகர்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்களுக்கு
சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை வருத்தத்தை தெரிவிக்கின்றது.

LAW & SOCIETY TRUST
නීතිය හා සමාජ භාරය
சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை

## ஆய்வு குழு

**பிரதான ஆய்வாளர்கள்**

விதுர முணசிங்க
உபுல் விக்கிரமசிங்க

**ஆய்வு ஒருங்கிணைப்பாளர்கள்**

தமித் சதுரங்க பிரேமரத்ன
செல்வரத்தினம் நிஷாந்தனி

**தரவு பகுப்பாளர்கள்**

சம்பிக்க சமரவிக்ரம
தத்சரணி சந்தரேகா ஹந்தபாங்கொட
மனுலி லாவண்யா சிறிகுமார
மஹேஸ் குலசிங்க

**கள உதவியாளர்கள்**

ஆண்டி பரமேஸ்வரம்
அஷான் ஹசித குமார
பாலசுப்ரமணியம் சஜித்ரா
சமிலா சாந்தனி திலகரத்ன
சம்பிக்க சமரவிக்ரம
டி. எம். நிபுன் யாசஸ்
டி. ஆர். பி.குமார
டி. எப். சுரேன் கிரிஷாந்த்
தமித் சதுரங்க பிரேமரத்ன
தினுஷா மதுவந்த தசநாயக்க
பாத்திமா ஹஸ்னா ஹஸ்புல்லா
ஜி. ஷஷீமா திலக்ஷி
இரேஷா சுபாஷினி மாணிகே
ஜே. எச். எம். ஹஸ்ரன்
ஜோசப் காட்வின் ஜஸ்மிகன்
கே. சசி பிரபாத்
கஹகல்லகே சுனில் பிரேமதாச
குழந்தேசு லூசியா
எம். ஜி. ஜெயநாத குமார
எம்.எச்.ரஹ்னா பாத்திமா
எம். ஜனனி
எம். எம். ஷ∴பீ
மனுலி லாவண்யா சிறிகுமார
மரியன் பிரதீபா சுதர்ஷனி கூங்கே
முகமது அமிருன் நிஷா
நிமாஷா கிம்ஹாநி ஸோமரத்நா
நவ்∴பர் ரி∴ப்கான்
ஓஷதி மின்சாரா கஜவீர
பிரசன்னா பிரதீப் குமார்
ஆர். எம். கிம்ஹான் கயான்
ஆர். எம். டி.மிலன்
ரஜனிகாந்த் சரண்ஜா
எஸ். தனுஷ்கர்
சசிகா யசந்தி தர்மராஜ்
செல்வரத்தினம் நிஷாந்தனி
சேனாபதி துலிப் ரசங்கஜீவ
சித்துமினி மெண்டிஸ்
சுமதி நிருஜன்
சுனேத் அருண குமார
தத்சரணி சந்தரேகா ஹந்தபாங்கொட
தவராசா சுபேசன்
தில்லினா கிரிஷ்மல் கோஸ்டா
வி. ஜி. ஷெஹான் காவிந்தா
வாசுதேவன் வசந்தராஜ்
விவேகா விஜயகுமார்

**ஜனாதிபதி தேர்தல் 2024: மக்கள் அபிலாஷைகள்**

© சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை, 2024

ISBN 978-624-5545-29-2

இந்த ஆவணம் மற்றும் அதன் வெளியீட்டாளர் பற்றிய முறையான அறிமுகப்படுத்தலின் பின்னர் இந்நூலின் உள்ளடக்கத்தை அல்லது அதன் பகுதிகளை வணிகம் அல்லாத நோக்கத்திற்காக மாத்திரம் மேற்கோள் காட்டுவதற்கும் பிரதி எடுப்பதற்கும் அனுமதியுண்டு.

அட்டைப்பட வடிவமைப்பு : பாத்திய பெரேரா

கிரபிக் வடிவமைப்பு : சம்பிக்கா சமரநாயக்க

தனுஸ்ரீ வெலிகல

பக்க வடிவமைப்பு : முத்தையா கந்தரூபன்

சரவை நோக்கு : மாடசாமி விஜயகாந்த்

வெளியீடு :

LAW & SOCIETY TRUST
නීතිය හා සමාජ භාරය
சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை

இல. 03, கின்சி டெரஸ்,
கொழும்பு 00800.
இலங்கை.
தொலைபேசி : (+94) 112 68 48 45
தொலைநகல் : (+94) 112 68 68 43
இணையம் : www. lstlanka.org

# ஏற்புரை

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சகுந்தலா கதிர்காமர், நிகழ்ச்சி மற்றும் செயற்பாடுகளின் பணிப்பாளர் சந்துன் துடுகல ஆகியோர் வழங்கிய வழிகாட்டுதல்கள் மற்றும் ஒத்துழைப்பிற்கு ஆய்வுக் குழுவானது நன்றியை தெரிவிக்க விரும்புகின்றது. இந்த ஆய்வின் வெவ்வேறு கட்டங்களில் விதுஷா கமலேஸ்வரன், சத்துரிக்கா செவ்வந்தி, பிரபாத் ஹேமந்த, மாலிங்க ஜயரத்ன மற்றும் மாடசாமி விஜயகாந்த் ஆகியோர் பல்வேறு உதவிகளைச் செய்துள்ளார்கள். இந்த முயற்சியை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு சட்டம் மற்றும் சமூக நம்பிக்கையின் மனிதவளம் மற்றும் நிதிப்பிரிவுகள் அவசியமான உதவிகளை புரிந்துள்ளனர். இறுதியாக, இந்த ஆய்வில் பங்கு பற்றி தமது எதிர்கால அரசியல் மற்றும் பொருளாதார அபிலாஷைகளை வெளிப்படையாக தெரிவித்த அனைத்து பங்கேற்பாளர்களிற்கும் ஆய்வுக் குழு தனது நன்றியை தெரிவிக்க விரும்புகின்றது.

# பொருளடக்கம்

எழுத்துச் சுருக்கம்.......... viii

அட்டவணைகள் மற்றும் படங்கள்.......... ix

அறிமுகம்.......... 01

ஆய்வு நெறிமுறை.......... 03

கண்டுபிடிப்புகள் மற்றும் கலந்துரையாடல்.......... 10

முடிவுரை.......... 25

## எழுத்துச் சுருக்கம்

தேர்தல் திணைக்களத்தின் தேவைக்கேற்ப வரையறுக்கப்பட்டுள்ளது

# அட்டவணைகள் மற்றும் படங்கள்


அட்டவணை: 01: ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலிருந்தும் பதிலளித்தவர்களின் எண்ணிக்கை
படம் 01: மாவட்ட ரீதியான சிங்கள மாதிரியின் தொகுப்பு
படம் 02: மாவட்ட ரீதியான இலங்கைத் தமிழ் மாதிரியின் தொகுப்பு
படம் 03: மாவட்ட ரீதியான இலங்கை முஸ்லிம் மாதிரியின் தொகுப்பு
படம் 04: மாவட்ட ரீதியான மலையக தமிழ் மாதிரியின் தொகுப்பு
படம் 05: ஒவ்வொரு இன மாதிரியினதும் பாலின அமைப்பு
படம் 06: சிங்கள மாதிரிக்குள் ஒவ்வொரு வயதினரினதும் பாலினப் பிரிவு
படம் 07: இலங்கைத் தமிழ் மாதிரிக்குள் ஒவ்வொரு வயதினரினதும் பாலினப் பிரிவு
படம் 08: முஸ்லிம் மாதிரிக்குள் ஒவ்வொரு வயதினரினதும் பாலினப் பிரிவு
படம் 09: மலையகத் தமிழ் மாதிரிக்குள் ஒவ்வொரு வயதினரினதும் பாலினப் பிரிவு
படம் 10: ஒவ்வொரு நெறிமுறை மாதிரியிலும் வாக்களிப்பது அல்லது விலகுவது என்ற முடிவு
படம் 11: மக்கள் யாருக்கு வாக்களிக்கிறார்கள்
படம் 12: சிங்களவர்களிடையிலான விருப்பம்
படம் 13: ஒவ்வொரு வேட்பாளருக்கும் சிங்கள மாதிரியின் வயதுப் பிரிவு
படம் 14: இலங்கைத் தமிழர்களிடையிலான விருப்பம்
படம் 15: ஒவ்வொரு வேட்பாளருக்கும் இலங்கைத் தமிழ் மாதிரியின் வயதுப் பிரிவு
படம் 16: முஸ்லிம் வாக்காளர்களின் விருப்பம்
படம் 17: ஒவ்வொரு வேட்பாளருக்கும் முஸ்லீம் மாதிரியின் வயதுப் பிரிவு
படம் 18: மலையகத் தமிழ் வாக்காளர்கள் மத்தியிலான விருப்பம்
படம் 19: ஒவ்வொரு வேட்பாளருக்கும் மலையக தமிழ் மாதிரியின் வயதுப் பிரிவு

(படம் 12–19: தேர்தல் திணைக்களத்தின் தேவைக்கேற்ப வரையறுக்கப்பட்டுள்ளது)

படம் 20: 2024 ஜனாதிபதித் தேர்தலில் தீர்மானிப்பதில் முன்னுரிமை
படம் 21: சிங்கள மாதிரியின் முன்னுரிமைகள்
படம் 22: இலங்கைத் தமிழ் மாதிரியின் முன்னுரிமைகள்
படம் 23: முஸ்லிம் மாதிரியின் முன்னுரிமைகள்
படம் 24: மலையகத் தமிழ் மாதிரியின் முன்னுரிமைகள்
படம் 25: 2024 இல் தீர்மானிப்பதில் முன்னுரிமை
படம் 26: 2019 இல் தீர்மானிப்பதில் முன்னுரிமை
படம் 27: 2015 இல் தீர்மானிப்பதில் முன்னுரிமை
படம் 28: 2005 இல் தீர்மானிப்பதில் முன்னுரிமை
படம் 29: அடிப்படை தகவல் ஆதாரம் (சிங்களம்)
படம் 30: அடிப்படை தகவல் ஆதாரம் (இலங்கைத் தமிழ்)
படம் 31: அடிப்படை தகவல் ஆதாரம் (முஸ்லிம்)
படம் 32: அடிப்படை தகவல் ஆதாரம் (மலையகத் தமிழ்)
படம் 33: வாக்குறுதிகளை மீறுவதற்கான பதில் (இலங்கைத் தமிழ்)
படம் 34: வாக்குறுதிகளைக் மீறுவதற்கான பதில் (முஸ்லிம்)
படம் 35: வாக்குறுதிகளை மீறுவதற்கான பதில் (மலையகத் தமிழ்)

## அறிமுகம்

இலங்கை 1948 இல் சுதந்திரம் பெற்றதிலிருந்து “பாராளுமன்ற ஜனநாயகம்” என்ற தாராளமய பிரதிநிதித்துவ ஜனநாயக மாதிரியை முன்னெடுத்து வருகின்றது. அதில் மக்களின் அரசியல் அபிலாஷைகளை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு தேர்தல்மூலம் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. பிரித்தானிய காலணித்துவ பாரம்பரியத்தைக் கொண்ட பல நாடுகளில் இந்தப் போக்கினைக் காணக்கூடியதாக உள்ளது. இருந்தாலும், அதன் முற்று முழுதான தோல்விக்கு இலங்கையின் பிரதிநிதித்துவ ஜனநாயக அனுபவம் பல சான்றுகளை வழங்குகின்றது. பாராளுமன்றம் போன்ற அதன் ஜனநாயக அமைப்பு உயர்மட்ட பிடியில் சிக்கி ஊழல் செய்த உயர்மட்ட அரசியல்வாதிகளின் நலன்களிற்காக செயற்படுவதுடன் பொதுமக்களிற்கு எதிராகவும், அடக்குமுறையுடனும் செயற்படுகின்றது (உயங்கொட 2024)[1]. 2022 இன் அரகலய (மக்கள் எழுச்சி) இலங்கையின் இந்த பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் தோல்வி தொடர்பான விரக்தியின் மிக அண்மைய மற்றும் மிகத்தீவிரமான வெளிப்பாடாகும்.

பிரதிநிதித்துவ ஜனநாயக அரசியல் முறையில் ஜனநாயக நிறுவனங்களிற்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதில் தேர்தல்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இருந்தாலும், 1978 ஆம் ஆண்டு நிறைவேற்று ஜனாதிபதி முறை அறிமுகப்படுத்தப்பட்டு, ஜனாதிபதிக்கு அதியுயர் அதிகாரங்கள் வழங்கப்பட்டதுடன் இலங்கையில் ஏனைய தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் ஜனாதிபதி தேர்தல் மிக முக்கியத்துவத்தையும் ஈர்ப்பினையும் கொண்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு பதவியில் இருந்த ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்பி, இலங்கை வரலாற்றில் ஜனாதிபதி அல்லது பிரதமர் மக்கள் போராட்டம் காரணமாக பதவியை இராஜனாமா செய்த ஒரே ஒரு நிகழ்வு என்ற தேசிய வரலாற்றை உருவாக்கிய பின்னர் இடம்பெறும் முதலாவது ஜனாதிபதி தேர்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எதிர்வரும் தேர்தல் “இருமுனை, மும்முனை போட்டியாக” இருக்குமென அரசியல் ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர் (பீரிஸ் 2024)[2], இது முன்னைய ஜனாதிபதி தேர்தல்களில் இருந்து குறிப்பிடத்தக்களவு வேறுபட்டதாகும். முன்னைய தேர்தல்கள் அடிப்படையில் “ஒரு-முனை, இரு-வழிப் போட்டி” அல்லது “இரு-முனை, இரு-வழிப் போட்டியாக” இருந்தது. பீரிஸ் குறிப்பிடுவதைப் போன்று இது மும்முனை போட்டியாகும். ஏனென்றால் இங்கு மூன்று பிரதான வேட்பாளர்கள் வெற்றி பெறுவதற்காக போட்டியிடுகின்றனர் - ரணில் விக்கிரமசிங்க(RW), சஜித் பிரேமதாச (SP) மற்றும் அநுர குமார திசாநாயக (AKD). ஆனால் இரண்டு பரந்த அரசியல் திட்டங்கள் RW (மற்றும் ஐக்கிய தேசிய கட்சி /UNP) மற்றும் SP (மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி /ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு / SJB) ஆகியன 2022 இல் மக்கள் எழுச்சியை ஏற்படுத்திய எதிர்ப்பு அரசியல் கலாசாரத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன, மற்றும் AKD (மற்றும் ஜாதிக ஜன பலவேகய/தேசிய மக்கள் சக்தி / NPP) இது அதிருப்தியாளர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இரண்டு பிரதான வேட்பாளர்கள் மட்டுமே இருந்த முன்னைய ஜனாதிபதி தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் இது தெளிவான சான்றாகும்.

1 https://www.anidda.lk/2024/06/11/%E0%B6%B4%E0%B7%8A%E0%B6%BB%E0%B6%A2%E0%B7%8F%E0%B6%AD%E0%B6%B1%E0%B7%8A%E0%B6%AD%E0%B7%8A%E0%B6%BB%E0%B7%80%E0%B7%8F%E0%B6%AF%E0%B6%BA-%E0%B6%B4%E0%B7%8A%E0%B6%BB%E0%B6%A2-2/

2 https://polity.lk/2024-presidential-election-two-cornered-three-way-fight-pradeep-peiris/

இந்த அடிப்படையில், மூன்று பிரதான வேட்பாளர்களுக்கிடையில் கடும்போட்டி எழுந்துள்ளதுடன், தேர்தலிற்கு இன்னும் ஒரு மாதகாலமே உள்ள நிலையில் இலங்கையின் 9வது ஜனாதிபதியை யூகிப்பது மிகக்கடினமாகும். ஆனாலும் இந்தப் போட்டி சேறு பூசுதல், முறையற்ற கட்சித் தாவல்கள், துஷ்பிரயோகம், ஏனைய தேர்தல் முறைகேடுகள் போன்றவற்றால் வடிவமைக்கப்பட்ட அழகற்ற அரசியல் கலாச்சாரத்தை மீளுருவாக்கினாலும், அதன் தகுதிகள் இல்லாமல் இல்லை. இருப்பினும் வேட்பாளர்களினதும் அரசியல் கட்சிகளினதும் கொள்கைகள் மற்றும் செயல்முறை திட்டங்கள் பற்றி அறிந்து கொள்வதற்கும், கேள்விகள் கேட்ப-தற்கும், சவால் விடுவதற்கும் மக்கள் முன்னரைவிட மிக ஆர்வமாக இருக்கின்றனர். மறுபுறும் மக்கள் தங்கள் அரசியல் அபிலாஷைகளையும், அவர்கள் பதவிக்கு வந்தால் வேட்பாளர் மற்றும் கட்சியிடமிருந்து என்ன எதிர்பார்க்கின்றார்கள் என்பதனையும் வெளிப்படுத்த ஆர்வமாக உள்ளனர். 1931 ஆம் ஆண்டின் சர்வதேச உரிமையை (Korf et al. 2024)[3] அறிமுகப்படுத்தியதில் இருந்து இலங்கையில் மிகமுக்கிய ஜனநாயக தருணமாக இனங்காணப்பட்ட 2022 ஆம் ஆண்டின் அரகலயவிற்கு மக்களின் இந்த அரசியல் விழிப்புணர்வு மாற்றம் நேரடிக் காரணமாக இருக்கலாம். பிரதிநிதித்துவ ஜனநாயகத்துடன் மக்கள் எவ்வாறு தொடர்புகொள்கின்றார்கள் என்பதில் இந்த மாற்றத்தின் பிரதிபலிப்பை ஆராய இந்த ஆய்வு முயற்சித்துள்ளது.

2024 ஆம் ஆண்டின் ஜனாதிபதி தேர்தல் முன்னைய தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் மிக முக்கியமானதாகவும், தீவிரமானதாகவும் இருப்பதனால் வாக்காளர்கள் யாருக்கு வாக்களிக்க விரும்புகிறார்கள் என்பதனையும் அவர்களது தீர்மானத்தை நிர்ணயிக்கும் காரணிகள் என்ன என்பதனையும் புரிந்துக்கொள்வது மிக முக்கியமானதாகும். பெரும்பாலும் 2024 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் வெற்றிபெறும் வேட்பாளரை கணிப்பதில் கவனம் செலுத்தி, அண்மையில் வெளியிடப்பட்ட பல ஆய்வுகள் மற்றும் கருத்துக் கணிப்புகளிற்கு மாறாக இந்த ஆய்வு மக்கள் வாக்களிப்பதற்கு ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்யும் போது அவர்களின் முன்னுரிமைகளை இனம் கண்டு, அந்த முன்னுரிமைகள் காலப்போக்கில் எவ்வாறு இனம், வயது மற்றும் பாலினம் போன்ற முற்றிலும் மாறுபட்ட காரணிகளினால் வேறுபடுகின்றது என்பதனையும் ஆய்வுசெய்ய முற்பட்டுள்ளது.

3 Korf, B., Rambukwella, H., Peiris, P., de Mel, N., Sivamohan, S., Schenk, C., Wijewardene, S., Kadirgamar, A., and Geiser, U. 2024. The 'Cultural Life' of Democracy in Sri Lanka (And Beyond). Geopolitics, 1–48. https://doi.org/10.1080/14650045.2024.2379306

## ஆய்வு நெறிமுறை

1983 - கறுப்பு ஜூலை காலப்பகுதிக்கு பின்னரான இலங்கை அரசியல் பிரதானமாக இனப்பிரச்சினை மற்றும் துணை தேசியவாதம் (குருசிங்க 1986. குணவர்த்தன 2020)[4] ஆகியவற்றினால் கட்டமைக்கப்பட்டு மிகைப்படுத்தப்பட்டது என்பது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. முன்னைய ஜனாதிபதி தேர்தல்கள் குறிப்பாக வடக்கில் 2005 மற்றும் 2015 தேர்தல்கள் மற்றும் தெற்கில் 2019 தேர்தலில் வாக்காளர்களிற்கு இடையிலான இன ஒருமுகப்படுத்தல் இறுதி வெற்றியாளரை தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகித்தது என்பதனை எடுத்துக் காட்டுகின்றன. இந்த முன்மொழிவுகளை அடுத்து, இந்த ஆய்வு இலங்கையில் எண்ணிக்கை ரீதிரியில் நான்கு பிரதான இனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நான்கு தனித்தனி மாதிரிகளை கவனத்தில் கொண்டது. அவை, சிங்களம், இலங்கைத் தமிழ், இலங்கை முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழ் ஆகும். ஏனைய குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தி பதிலளித்தவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவு அவை அதன் எண்ணிக்கையில் முக்கியத்துவம் இன்மை காரணமாக இந்த ஆய்வில் இருந்து நீக்கப்பட்டன. அதனடிப்படையில் இந்த ஆய்வு ஜனாதிபதி தேர்தலில் ஒவ்வொரு இனப்பிரிவிற்குமிடையில், அவற்றை ஒன்றோடொன்று ஒப்பிடாமல் மக்களின் வாக்களிக்கும் நடத்தை மற்றும் உணர்வுகளை பகுப்பாய்வு செய்து புரிந்துகொள்ள முயற்சிக்கின்றது.

25 மாவட்டங்களிலும் 42 கிராம சேவகர் (GN) பிரிவுகளில் மொத்தம் 2867 ஆய்வு பதில்கள் சேகரிக்கப்பட்டன. 69 பதில்கள் முரண்பாடுகள் காரணமாக தரவு சுத்திகரிப்பு செயற்பாட்டின் போது நிராகரிக்கப்பட்டன. 2798 பதில்கள் இறுதி பகுப்பாய்விற்காக பரிசீலிக்கப்பட்டன. ஒவ்வொரு மாவட்டதில் இருந்தும் அந்த மாவட்டத்தின் இன அமைப்பை பிரதிநிதித்துவப்படுத்த GN பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டன. முழு மாவட்டத்திலும் பெரும்பான்மையானவர்கள் ஒரு இனக்குழுவை சார்ந்தவர்களாக இருக்கும்போது மாவட்டத்தில் ஒரு GN பிரிவு தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், மாவட்டம் பல இனக் குழுக்களைக் கொண்டிருக்கும்போது அந்த மாவட்டத்தின் இனப் பன்முகத்தன்மையை உள்ளடக்குவதற்காக பல GN பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டன. உதாரணமாக, கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு GN பிரிவு (பளை நகரம்) மட்டுமே தெரிவு செய்யப்பட்டது. ஆனால் கொழும்பு மாவட்டத்தில் மருதானை, கிராண்ட்பாஸ், சாஹிராஸ்புர, லியன்கொட மற்றும் உந்துருகுகொட GN பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டன.

4 Gunasinghe, N. 1986. Ethnic Conflict in Sri Lanka: Perceptions and Solutions. South Asia Bulletin, vol. 6, no. 2, https://doi.org/10.1215/07323867-6-2-34; Goonewardena, K. (2020). Populism, nationalism and Marxism in Sri Lanka: from anti-colonial struggle to authoritarian neoliberalism. Geografiska Annaler: Series B, Human Geography, 102(3), 289–304. https://doi.org/10.1080/04353684.2020.1780146


அட்டவணை 01 மாவட்டம், பிரதேச செயலாளர் மற்றும் பிரிவின் விபரங்களின் மாதிரியை வழங்குகின்றது.

| | மாகாணம் | மாவட்டம் | DS பிரிவு | GN பிரிவு | பதில்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | மத்திய மாகாணம் | கண்டி | உடபலத | கம்பளை மேற்கு | 103 |
| 2 | | | கங்காவட்டகோரளை | கீரஸ்ஸகல | 99 |
| 3 | | மாத்தளை | உடபலாத | நிக்ககொல்ல | 30 |
| 4 | | | உக்குவெல | தவளம்கொய | 27 |
| 5 | | | உக்குவெல | வரகந்த | 53 |
| 6 | | நுவரெலியா | நோர்வூட் | கிர்கோஸ்வல்ட் | 86 |
| 7 | கிழக்கு மாகாணம் | அம்பாறை | தமண | வடிநாகல | 50 |
| 8 | | | கல்முனை | இஸ்லாமாபாத் | 50 |
| 9 | | மட்டக்களப்பு | கிராண் | மருதங்கேணி | 100 |
| 10 | | திருகோணமலை | சேருவில | நாவக்கேணிக்காடு | 21 |
| 11 | | | | சேருநுவர | 39 |
| 12 | | | | தங்கநகர் | 30 |
| 13 | வட மத்திய | அனுராதபுரம் | நொச்சியாகம | நலவாகம | 99 |
| 14 | | பொலன்னறுவை | ஹிங்குராக்கொடை | சந்தனபொகுன | 101 |
| 15 | வடக்கு | யாழ்ப்பாணம் | சுழிபுரம் | தொல்புரம் மேற்கு | 98 |
| 16 | | கிளிநொச்சி | பளை | பளை நகரம் | 94 |
| 17 | | மன்னார் | முசலி | சிலாவத்துறை | 94 |
| 18 | | முல்லைத்தீவு | புதுக்குடியிருப்பு | வள்ளுவர்புரம் | 106 |
| 19 | | வவுனியா | வவுனியா வடக்கு | நயினாமடு | 73 |
| 20 | | | யாழ்ப்பாணம் | சுழிபுரம் | 25 |
| 21 | வட மேல் | குருநாகல் | மாவத்தகம | தெல்கொல்லவத்தை தெற்கு | 104 |
| 22 | | புத்தளம் | மாதம்பே | கலாஹிட்டியாவ | 50 |
| 23 | | | கல்பிட்டி | ஆலங்குடா | 56 |
| 24 | சப்பிரகமுவ | கேகாலை | தெரணியகல | மியனவிட | 49 |
| 25 | | | வரகாபொல | எத்னாவல | 48 |
| 26 | | இரத்தினபுரி | பலாங்கொடை | பலாங்கொடை | 50 |
| 27 | | | | பாகொடை | 50 |
| 28 | தெற்கு | காலி | ஹிக்கடுவ | மோதரபடுவத | 99 |
| 29 | | ஹம்பாந்தோட்டை | சூரியவெவ | பதிகம்தொட்ட | 102 |
| 30 | | மாத்தறை | முலட்டியன | தேவலேகம கிழக்கு | 99 |
| 31 | ஊவா | பதுளை | பண்டாரவளை | பண்டாரவளை | 51 |
| 32 | | | மஹியங்கனை | கின்னொறுவ | 50 |
| 33 | | மொனராகலை | சூரியவெவ | மஹாகளுகொல்ல | 100 |


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 34 | மேல் | கொழும்பு | கொழும்பு | மருதானை | 25 |
| 35 | | | கொழும்பு | கிராண்ட்பாஸ் வடக்கு | 24 |
| 36 | | | மஹரகம | லியனகொட | 50 |
| 37 | | | பொரல்லை | சஹஸ்புர | 50 |
| 38 | | | ஹோமாகம | உந்துருகொட | 50 |
| 39 | | கம்பஹா | நீர்கொழும்பு | முன்னக்கரே | 45 |
| 40 | | | பியகம | கந்துபொட | 105 |
| 42 | | | பியகம | ஹெய்யன்துடுவ தெற்கு | 60 |
| 43 | | களுத்துறை | களுத்துறை | வாத்துவ தெற்கு | 75 |
| 44 | | | களுத்துறை | களுத்துறை மேற்கு | 28 |
| | மொத்தம் | | | | 2798 |

அட்டவணை: 01: ஒவ்வொரு GN பிரிவிலிருந்தும் பதிலளித்தவர்களின் எண்ணிக்கை


சிங்கள மாதிரியானது 21 மாவட்டங்களில் இருந்து 1574 பதிலளித்தவர்களைக் கொண்டிருந்தது, மேலும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான மக்களைக் கொண்ட மாவட்டம் கம்பஹா (189) ஆகும். கொழும்பு, அனுராதபுரம், களுத்துறை, குருநாகல், மாத்தறை, பொலன்னறுவை, அம்பாந்தோட்டை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் இருந்து எடுக்கப்பட்ட மாதிரியின் மற்றொரு குறிப்பிடத்தக்க சதவீதம் ஆகும். இலங்கைத் தமிழர் மாதிரியில் 16 மாவட்டங்களைச் சேர்ந்த 611 பேர் இருந்தனர், அவர்களில் பெரும்பாலானவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். அம்பாறை, புத்தளம், மன்னார், மாத்தளை மற்றும் திருகோணமலை ஆகிய 13 மாவட்டங்களில் இருந்து பெரும்பாலான மாதிரிகளில் 280 முஸ்லிம்கள் அடங்குவர். மலையகத் தமிழ் மாதிரியில் 12 மாவட்டங்களைச் சேர்ந்த 325 பேர் இருந்தனர். பெரும்பாலானவர்கள் நுவரெலியா, கண்டி, கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். படம் 1 முதல் 4 வரை ஒவ்வோர் இன மாதிரியின் மாவட்ட வாரியான தொகுப்பைக் காட்டுகிறது.





படம் 01: சிங்கள மாதிரியின்
மாவட்ட ரீதியான தொகுப்பு




படம் 02: இலங்கைத் தமிழ் மாதிரியின்
மாவட்ட ரீதியான தொகுப்பு





படம் 03: இலங்கை முஸ்லிம்
மாவட்ட ரீதியான தொகுப்பு




படம் 04: மலையகத் தமிழ் மாதிரியின்
மாவட்ட ரீதியான தொகுப்பு


45 கள உதவியாளர்களைக் கொண்ட குழு ஆய்வு படிவத்தை பயன்படுத்தி பதில் அளித்தவர்களுடன் நேருக்கு-நேர் நேர்காணலை மேற்கொண்டு தரவுகளைச் சேகரித்தது. தரவு சேகரிப்பை ஆரம்பிப்பதற்கு முன்னர் கள உதவியாளர்கள் அனைவரும் நேரடியான அல்லது ஒன்லைன் ஊடாக அரைநாள் பயிற்சியினை பெற்றிருந்தனர். அந்த பயிற்சியின்போது வினாக் கொத்து, கருத்திற்கொள்ள வேண்டிய நெறிமுறை மற்றும் ஆய்வுடன் தொடர்புபட்ட ஏனைய நுட்பங்கள் போன்றன பற்றி அவர்களிற்கு விரிவான விளக்கம் அளிக்கப்பட்டிருந்தது. இந்த ஆய்வு 2019, 2015 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் வேட்பாளர்களை தெரிவு செய்த முக்கிய காரணிகள் பற்றி கேட்டாலும், பதிலளிப்பவர்கள் கடந்தகால தேர்தல்களின் ஞாபகங்களை மீட்டுவதற்கு அவர்களிற்கு உதவி செய்யுமாறு ஆய்வு உதவியாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. தரவு சேகரிக்கப்பட்ட இரண்டு நாட்களின் பின்னர் களத்தில் அவர்கள் முகம்கொடுத்த சவால்கள் மற்றும் அவர்கள் இனம்கண்ட பிரச்சனைகள் பற்றிய கலந்துரையாடல் இடம் பெற்றது. அனைத்து மாவட்டங்களிலும் தரவு சேகரிப்பு 2024 ஆகஸ்ட் 03 தொடக்கம் 14 ஆம் திகதிகளுக்கிடையில் இடம்பெற்றது. அதன்படி, இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகள் அந்தக் காலப்பகுதிக்கு அப்பால் அன்றி, குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மக்களின் கருத்துக்களை பிரதிபலிக்கின்றன. ஆய்வு படிவத்தின் ஊடாக சேகரிக்கப்பட்ட எண்ணிக்கையிலான தரவுகளோடு, மக்களின் அபிலாஷைகளை விரிவாக தெரிந்து கொள்வதற்காக பண்பியல் தரவுகளும் சேகரிக்கப்பட்டன. அதன்படி, தேர்தலில் அவர்களது முடிவுகளிற்கு பாதிப்பாக இருந்த காரணிகள் பற்றிய அவர்களது கருத்துக்கள் ஆய்வு படிவத்தின் குறிப்பு பகுதியில் பதிவு செய்யப்பட்ன. தரவு சேகரிப்பு முடிவில், கள உதவியாளர்களின் அவதானிப்புகள் மற்றும் அனுபவங்கள் பற்றி முதன்மை ஆய்வாளர்களுடன் கலந்துரையாடுவதற்கான முழுநாள் விளக்கப்பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த கலந்துரையாடலின்போது பதிவு செய்யப்பட்டிருந்த காத்திரமான பதில்கள் தரம் பிரிக்கப்பட்டு பிரதான கருப்பொருள் பகுதிகளிற்குள் இனம் காணப்பட்டன.

அனைத்து 4 மாதிரிகளிலும் முடிந்தவரை பாலின பிரதிநிதித்துவத்தை சமமாக பேணுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பொதுவாக, மலையகத் தமிழர்கள் மற்றும் சிங்கள மாதிரிகளின் விகிதாசாரத்தில் உள்ள வித்தியாசம் குறிப்பிட்டு சொல்லக்கூடியளவில் இல்லை (மலையகத் தமிழர்கள் - 52% பெண்கள் மற்றும் 48% ஆண்கள், சிங்களவர்கள் - 49% பெண்கள் மற்றும் 51% ஆண்கள்). இலங்கைத் தமிழ் மற்றும் முஸ்லிம் மாதிரிகளில் ஆண் - பெண் விகிதாசாரம் 10% இற்கும் குறைவான வித்தியாசத்தைக் கொண்டிருந்தது (இலங்கை தமிழ் - பெண்கள் 56% மற்றும் ஆண்கள் 44%, முஸ்லிம் பெண்கள் 45% மற்றும் ஆண்கள் 55%). ஒவ்வொரு மாதிரியும் பாலினத்தால் எவ்வாறு வகுக்கப்படுகிறது என்பதை வரைபடம் 1 காட்டுகிறது. ஆண் அல்லது பெண் என தங்கள் பாலினத்தை அடையாளம் காணாத பதிலளித்தவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்தது ($n = 3$), எனவே அவர்கள் அடுத்தடுத்த பகுப்பாய்வில் விலக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.





படம் 05: ஒவ்வொரு இன மாதிரியினதும் பாலின அமைப்பு


அனைத்து இன மாதிரிகளிலும் அனைத்து வயது பிரிவினரும் உள்ளடக்கப்பட்டிருந்தனர். படம் 06 - 09 வரை ஒவ்வொரு இனத்திலும் ஒவ்வொரு வயதுப்பிரிவிலும் உள்ள மாதிரிகளின் பாலினப் பிரிவை காட்டுகின்றது.





படம் 06: சிங்கள மாதிரிக்குள் ஒவ்வொரு வயதினரினதும் பாலினப் பிரிவு




படம் 07: இலங்கைத் தமிழ் மாதிரிக்குள் ஒவ்வொரு வயதினரினதும் பாலினப் பிரிவு




படம் 08: முஸ்லிம் மாதிரிக்குள் ஒவ்வொரு வயதினரினதும் பாலினப் பிரிவு




படம் 09: மலையகத் தமிழ் மாதிரிக்குள் ஒவ்வொரு வயதினரினதும் பாலினப் பிரிவு


தேர்தல் திணைக்களத்தின் தேவைக்கேற்ப வரையறுக்கப்பட்டுள்ளது

தரவு சேகரிப்பு ஆரம்பிக்கப்பட்டபோது, ஜீவன் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (CWC), ஏற்கனவே அரசுக்கு தனது ஆதரவை தெரிவித்திருந்தது. தரவு சேகரிப்பு தொடங்கி மூன்று நாட்களுக்குப் பிறகு, பழனி திகாம்பரம், மனோ கணேசன் மற்றும் வி. ராதாகிருஷ்ணன் ஆகிய மலையக தமிழ்க் கட்சித் தலைவர்களின் தமிழ் முற்போக்குக் கூட்டணி SP இற்கு ஆதரவை வழங்கியது. மலையகத் தமிழ் சமூகம் வாழும் பெரும்பாலான பகுதிகளில் (கண்டி மாவட்டத்தில் ஹீரஸ்ஸ பிரிவை தவிர) தரவு சேகரிப்பு ஆகஸ்ட் 6 ஆம் திகதி வரை தொடங்கப்படாததால் இந்த மாற்றம் ஆய்வில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. அதன்படி, மலையக சமூகத்தின் குறிப்பிடத்தக்க தலைவர்களின் ஒருமுகப்படுதலின் பின்னர் பெரும்பான்மையான மலையகத் தமிழர்களின் தரவு சேகரிக்கப்பட்டது.

சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தனித்தனியாக சேகரிக்கப்பட்ட 2,867 உள்ளீடுகளைக் கொண்ட மூல தரவின் துல்லியத்தை உறுதி செய்வதற்காக முரண்பாடுகள் அல்லது தவறுகள் மதிப்பாய்வு செய்யப்பட்டது. இந்த உள்ளீடுகள் தொடர்புடைய GN பிரிவுகள், மாவட்டங்கள் மற்றும் மாகாணங்களின் கீழ் இனம்காணப்பட்டன. இறுதியில் பகுப்பாய்வை பாதிக்கலாம் என்பதனால், தரவை பகுப்பாய்வு செய்வதற்கு முன், ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட ஆய்வு பத்திரத்தில் சாத்தியமான தாக்கத்தின் காரணமாக 69 தரவுப் புள்ளிகள் அகற்றப்பட்டன. மீதமுள்ள 2,798 உள்ளீடுகள் தரப்படுத்தப்பட்டதுடன், முக்கிய கருதுகோள்களின் அடிப்படையில் ஆய்ந்தறி (pivot) அட்டவணைகளைப் பயன்படுத்தி தரவு பகுப்பாய்வு ஆரம்பிக்கப்பட்டது. ஆய்ந்தறி (pivot) அட்டவணைகளின் முடிவுகள் நிரல் (bar) விளக்கப்படங்கள் மற்றும் வட்டகோண (pie) விளக்கப்படங்கள் இரண்டிலும் விளக்கப்பட்டுள்ளன, அவை சிறந்த புரிதலுக்கு தொடர்புடைய சதவீதங்களைக் காட்டுகிறது. தேவைப்படும் இடங்களில், அவதானிப்புகளின் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்த புள்ளியியல் சோதனைகள் நடத்தப்பட்டன. இந்த செயன்முறையானது, ஒவ்வொரு சமூகத்தினுள்ளும் உள்ள தொடர்புகளைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் வாக்களிக்கும் செயற்பாட்டை ஆய்வு செய்ய அனுமதித்தது, மேலும் தேவைப்படும் இடங்களில், முடிவுகளின் துல்லியத்தை சரிபார்க்க கருதுகோள்கள் பரீட்சிக்கப்பட்டன.


### கண்டுபிடிப்புகளும் உரையாடலும்

இந்த வருட ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பு தொடர்பாக பதிலளித்தவர்களில் பெரும்பாலானவர்கள் தாம் வாக்களிப்பதாக கூறினர். 97% ஆன மலையக தமிழர்கள் மற்றும் இலங்கை தமிழர்கள் தாங்கள் இம்முறை வாக்களிப்போம் எனக்கூறினர். சிங்கள மற்றும் முஸ்லிம் இன மாதிரிகளின் வாக்களிக்க தீர்மானித்துள்ளவர்களின் வீதம் 90% ஆகும்.





படம் 10: ஒவ்வொரு நெறிமுறை மாதிரியிலும் வாக்களிப்பது அல்லது விலகுவது என்ற முடிவு

தேர்தலில் நீங்கள் யாருக்கு வாக்களிப்பீர்கள் எனக்கேட்டபோது பெரும்பாலான சிங்கள மக்களில் இனை தெரிவு செய்துள்ளனர். தாம் க்கு வாக்களிக்கப் போவதாக கூறினர், கிட்டத்தட்ட இற்கும், இற்குமான தெரிவாக இருந்தது.





படம் 11: மக்கள் யாருக்கு வாக்களிக்கிறார்கள்

சிங்கள மாதிரிகளின் (1574 இல் 432) 27.94% இன்னும் வேட்பாளரைத் தீர்மானிக்கவில்லை என்பது மிகவும் குறிப்பிடத்தக்க உண்மை. மற்றொரு 12.6% பேர் தாங்கள் ஏற்கனவே முடிவு செய்துவிட்டதாகவும் ஆனால் தங்கள் விருப்பத்தை வெளியிடத் தயங்குவதாகவும் கூறியுள்ளனர்.




படம் 12: சிங்களவர்களிடையிலான விருப்பம்


மற்றொரு முக்கியமான விடயம் என்னவென்றால், இற்கு வாக்களிக்க முடிவு செய்துள்ளதாகக் கூறிய பெரும்பாலானவர் இளம் சிங்கள வாக்காளர்களாகும். மற்றும் இற்கு வாக்களிப்போம் என்று கூறியவர்களில் பெரும்பாலானோர் வயதான வாக்காளர்கள். மற்றும் இற்கு வாக்களிப்போம் என்று கூறியவர்கள் இனம்காணக் கூடிய குறிப்பிட்ட ஒரு வயது குழுவைக் கொண்டிருக்கவில்லை.





படம் 13: வயதடிப்படையில் சிங்கள வாக்காளர்களின் வேட்பாளர் தெரிவு

இலங்கைத் தமிழ் சமூகம் வேறுவிதமாக பதிலளித்தது பேர் இனை தேர்வு செய்தனர். பேர் இற்கு வாக்களிக்க எதிர்பார்ப்பதாகவும், இற்கு கிட்டத்தட்ட பேர் வாக்களிப்பதாகவும் கூறியுள்ளனர். வடக்கில் தமிழ் வேட்பாளருக்கு வாக்களிப்பதாக தெரிவித்துள்ளனர். மாதிரியில் உள்ள 611 இலங்கைத் தமிழர்களில் ஒருவர் மட்டுமே இற்கு வாக்களிப்பதாகக் கூறினார்.

ஆகும். மிகவும் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால், பெரும்பாலான மாதிரிகள் (35.27%) அவர்கள் இன்னும் முடிவு செய்யவில்லை என்று பதிலளித்தனர். மேலும் 20% பேர் தங்கள் முடிவை அறிவிக்க விரும்பவில்லை என்று கூறியுள்ளனர். அதன்படி, எந்த வேட்பாளருக்கு 50% (611 இல் 334) தமிழ் வாக்குகள் கிடைக்கும் என்பதை இந்த ஆய்வில் தீர்மானிக்க முடியவில்லை.





படம் 14: இலங்கைத் தமிழர்களின் விருப்பம்





படம் 15: வயதடிப்படையில் இலங்கைத் தமிழ் வாக்காளர்களின் வேட்பாளர் தெரிவு

பெரும்பாலான முஸ்லிம்களின் தேர்வாக இருந்தது . இது சதவீதமாக இருந்தது. பேர் க்கும் க்கும் வாக்களிப்பதாகக் கூறியுள்ளனர். பேர் இன்னும் தீர்மானிக்கவில்லை என்றும், பேர் தங்கள் முடிவை அறிவிக்க விரும்பவில்லை என்றும் கூறியுள்ளனர். அடையாளம் காணக்கூடிய மற்றொரு தனித்துவமான அம்சம் என்னவென்றால், இற்கு வாக்களிப்போம் என்று கூறிய முஸ்லிம்கள் பெரும்பாலும் இளைஞர்களாகும். மாறாக, இற்கு வாக்களிப்போம் என்று கூறியவர்கள் குறிப்பாக 35 வயதுக்கு மேற்பட்டவர்கள்.





படம் 16: முஸ்லிம் வாக்காளர்களின் விருப்பம்





படம் 17: வயதடிப்படையில் முஸ்லிம் வாக்காளர்களின் வேட்பாளர் தெரிவு

மலையகத் தமிழ் சமூகத்தில், மிகவும் பிரபலமான வேட்பாளர். பேர் இற்கு வாக்களிப்பதாகக் கூறியுள்ளனர், மேலும் அவர்கள் எல்லா வயதினரையும் சேர்ந்தவர்கள். மற்றும் தேர்வாக இருந்தது. இளம் வாக்காளர்கள் மத்தியில் இற்கு வாக்களிக்கும் போக்கு மலையகத் தமிழர்களிடமும் காணப்படுகிறது. 60 வயதுக்கு மேற்பட்ட 46 பேரில், எவரும் இற்கு வாக்களிப்பதாகக் கூறவில்லை.





படம் 18: மலையக தமிழ் வாக்காளர்கள் மத்தியிலான விருப்பம்




படம் 19: ஒவ்வொரு வேட்பாளருக்கும் மலையகத் தமிழ் மாதிரியின் வயதுப் பிரிவு

2024 ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதை தீர்மானிக்கும் வாக்காளர்களின் முக்கிய கருத்துக்களை இந்த ஆய்வு ஆராய்கின்றது. அவர்கள் கருத்திற்கொண்ட முதல் 3 காரணிகளுக்கு முன்னுரிமை அளிக்குமாறு அவர்கள் கோரப்பட்டனர், மேலும் தெரிவில் பின்வருவன உள்ளடங்கும்: அந்தந்த வேட்பாளரின் பொருளாதாரத்திற்கான அணுகுமுறை, தேசிய இனப்பிரச்சினைக்கான அணுகுமுறை, சட்டத்தின் ஆட்சியில் அவர்களின் தலையீடு, அவர்களின் குடும்பம் பாரம்பரியமாக அந்த வேட்பாளருக்கு அல்லது அவரது கட்சிக்கு வாக்களித்தது, வேட்பாளரின் இனம் மற்றும் மேற்கூறிய காரணிகளுக்கு தொடர்பற்ற வேறு ஏதேனும் காரணிகள். சிங்களம், இலங்கைத் தமிழ், முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழ் ஆகிய நான்கு மாதிரிகளில் ஒவ்வொன்றிலும் பெரும்பான்மையானவர்கள், 2024 ஜனாதிபதித் தேர்தலில் அவர்களின் வாக்களிப்பில் பொருளாதாரம் குறித்த வேட்பாளர்களின் அணுகுமுறையே மிகவும் தீர்க்கமான காரணியாக இருக்கும் என்பதைத் தெரிவிக்கிறது.

பொருளாதாரத்தை (82.35%) கருத்திற்கொள்வதில் ஏனைய இனக்குழுக்களுடன் ஒப்பிடுகையில் மலையகத் தமிழ் சமூகத்தில் பதிலளிப்பவர்கள் மிக அதிகமாக உள்ளனர், குறைந்த சதவீதத்தினர் முஸ்லிம் சமூகத்திடம் இருந்து வந்துள்ளனர் (63.74%). ஏனைய இனத்தவர்களுடன் ஒப்பிடுகையில் முஸ்லிம் சமூகத்தினரிடையே சட்டத்தின் விதியே பிரதான காரணியாக இருப்பதாகக் கூறியவர்களின் எண்ணிக்கை அதிகம் (முஸ்லிம் - 17.95%, சிங்களவர்கள் - 10.8%, இலங்கைத் தமிழ் - 7.65%, மலையகத் தமிழ் - 4.64%).





படம் 20: 2024 ஜனாதிபதித் தேர்தலில் தீர்மானிப்பதில் முன்னுரிமை

பதிலளித்தவர்களுக்கு வழங்கப்பட்ட தெரிவுகள் பரந்ததாக இருந்தமையால், பதிலளிப்பவர் ஒவ்வொருவரும் தங்களின் விருப்பத்தை முடிந்தவரை விரிவாகக் கூறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர், மேலும் விரிவான பதில்கள் ஆய்வுப் படிவத்தில் தரவு சேகரிப்பாளரின் குறிப்புகளாக பதிவு செய்யப்பட்டன. தரவு சேகரிப்பின் முடிவில், தரவு சேகரிப்பாளர்களுடன் அவர்களின் அனுபவங்கள் குறித்த விரிவான கலந்துரையாடல்களுடன் பதிலளித்தவர்களின் தெரிவுகள் மேலும் வெளிக்கொண்டுவரப்பட்டன.

**பொருளாதாரக் காரணிகள்**

ஆய்வின் முக்கிய கண்டுபிடிப்புகளில் ஒன்று, வாக்களிப்பது குறித்த அவர்களின் முடிவுகளில் பொருளாதார அபிலாஷைகள் தொடர்பாக கிராமப்புற, நகர்ப்புற மற்றும் பெருந்தோட்ட சமூகங்களுக்கிடையே தெளிவான வேறுபாடுகள் உள்ளன. நகர்ப்புற சமூகங்கள் (குறிப்பாக மேல் மாகாணத்தில்) வரிச்சுமைகளை குறைத்தல் மற்றும் பொருட்களின் விலை குறைப்பு போன்ற பொருளாதார நெருக்கடி தொடர்பான பிரச்சினைகளில் தலையீட்டை மிக முக்கியமானதாகக் கருதுகின்றன. ஒப்பிட்டுப் பார்க்கையில், ஹம்பாந்தோட்டை, மொணராகலை, மாத்தறை மற்றும் அனுராதபுரம் போன்ற பகுதிகளில் பதிலளித்தவர்களில் பெரும்பாலானோர் இரசாயன உரங்களின் விலையைக் குறைத்தல், விவசாய இயந்திரங்களுக்கான வரிகளைக் குறைத்தல் மற்றும் பயிர் சேதங்களுக்கு இழப்பீடு வழங்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தினர். பல்கலைக்கழக பட்டதாரிகளின் வேலையில்லாத் திண்டாட்டம் பல இளைஞர்களுக்கு, குறிப்பாக அனுராதபுர மாவட்டத்தில் உள்ள சிங்களவர்கள் மற்றும் வடக்கில் உள்ள இலங்கைத் தமிழர்கள் மத்தியில் ஒரு முக்கியமான பொருளாதாரக் காரணியாக தெரிவிக்கப்பட்டது. பொருட்களின் விலையைக் குறைத்தல், மானியங்கள் வழங்குதல், பாடசாலை மாணவர்களுக்கு உணவு மற்றும் சீருடை வழங்குதல், முதியோர்களுக்கு விசேட உதவிகள் வழங்குதல், தோட்டங்களில் பணிபுரியும் மக்களின் சம்பள அதிகரிப்பு என்பன இன்றியமையாதவை என பதிலளித்த பெரும்பாலான மலையக தமிழர்கள் தெரிவித்தனர். நலன்புரி தொடர்புடைய விடயங்களைத் தவிர, மலையக சமூகத்தின் நிலமற்ற பிரச்சினையைத் தீர்ப்பதும் ஒரு முக்கியமான பொருளாதார காரணியாகக் பதிலளித்த பெரும்பாலானவர்களால் கருதப்படுகிறது என்பதை ஆய்வுகளின் முடிவுகள் நிரூபித்துள்ளன. சிலாவத்துறை போன்ற தொலைதூரப் பகுதிகளில் போருக்குப் பின்னரான நில அபகரிப்பு தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டியதன் அவசியமும் பொருளாதாரத்தின் பரந்த விடயங்களிற்குள் காணப்பட்டது. திருகோணமலை மற்றும் புத்தளம் மாவட்டங்களைச் சேர்ந்த சிங்கள, முஸ்லிம் சமூகங்கள் பொருளாதார நெருக்கடி காரணமாக அதிகளவான பெண்கள் வெளிநாடு செல்வதும் குறிப்பிடத்தக்க பொருளாதாரப் பிரச்சினை எனவும், நாட்டின் பொருளாதார நெருக்கடியை வெற்றிகரமாக தீர்ப்பது வெளிநாட்டு வேலைக்காக பெண்கள் நாட்டை விட்டு வெளியேறுவதைக் குறைக்கும் எனத்தெரிவித்துள்ளனர். ஏனைய இனச் சமூகங்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்ட பொதுவான பொருளாதாரக் கருத்துக்களுக்கு அப்பால், பதிலளித்தவர்களில் இலங்கைத் தமிழர்களில் கணிசமானோர் வீட்டுப்பிரச்சினை மற்றும் அரசாங்க ஊழியர்களின் குறைந்த சம்பளம் தொடர்பாக தமது கவலையை வெளிப்படுத்தினர். பல்வேறு சமூகங்கள் வாக்களிப்பதற்கு தங்கள் முடிவெடுப்பதில் முன்னுரிமை அளிக்கும் பொருளாதார காரணிகளுக்கு இடையே பாரிய வேறுபாடு உள்ளது என்பது தெளிவாக தெரிகிறது. இது பொருட்களின் விலை, நலன்புரி, சமூகப் பாதுகாப்பு, உற்பத்தி, வரி குறைப்பு முதல் வேலைவாய்ப்பு உருவாக்கம் வரை வேறுபட்டது.

தேர்தல் திணைக்களத்தின் தேவைக்கேற்ப வரையறுக்கப்பட்டுள்ளது




படம் 21: சமூகங்களில் பொருளாதார அபிலாஷைகள் அடிப்படையில் முன்னுரிமை வழங்கல்


**சட்டத்தின் ஆட்சி**

பொருளாதாரததை அடுத்து, பதிலளித்தவர்கள் அதிக கவனம் செலுத்திய காரணி சட்டத்தின் ஆட்சி. சட்டத்தின் ஆட்சியில் அதிக கவனம் செலுத்தியவர்கள் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். முறையே, முஸ்லிம் சமூகத்தில் 16.9%, சிங்கள சமூகத்தில் 10%, இலங்கைத் தமிழ் சமூகத்தில் 7.9% மற்றும் மலையக தமிழ் சமூகத்தில் 4.6% ஏனைய காரணிகள் அனைத்தையும்விட சட்டத்தின் ஆட்சியையே முக்கியமாகக் கருதுவதாகத் தெரிவித்துள்ளனர். பதிலளித்த முஸ்லிம்களில் பெரும்பான்மையானவர்களுக்கு, சட்டத்தின் ஆட்சி என்பது அவர்கள் கடந்த காலத்தில் (குறிப்பாக ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்குப் பிறகு) அனுபவித்த அநீதிகளுக்கு எதிரான சட்ட பாதுகாப்பைக் குறிக்கிறது. வீடுகளில் சோதனை நடத்துவதும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்வதும் பாரபட்சமானது என்று அவர்கள் நம்புகின்றனர்.

தீவிரவாதச் செயல்களில் ஈடுபடுபவர்களைத் தேடுவதற்குப் பதிலாக, தங்கள் சமூகத்தில் அரசியல் ரீதியாக செயல்படும் உறுப்பினர்களை ஒடுக்குவதற்காக சட்டம் தவறான முறையில் பயன்படுத்தப்படுவதாக அவர்கள் கருத்து தெரிவித்தனர். கோவிட்-19 தொற்றுநோய்களின் போது இறந்த உடல்களை வலுக்கட்டாயமாக அடக்கம் செய்வதிலும் அதே அநீதி மற்றும் பாகுபாடு இடம்பெற்றதை அவர்கள் உணர்ந்தனர். சமத்துவம் மற்றும் பாகுபாடு இன்றி, எந்தவொரு சமூகமும் பாதிக்கப்படாமல் பாதுகாப்போடு சட்டத்தின் ஆட்சியை வளர்க்கக்கூடிய ஒரு ஆட்சி முறையின் அவசியத்தை அவர்கள் வெளிப்படுத்தினர். அதேநேரம், முஸ்லிம் பெண்கள் தங்கள் உடையின் காரணமாக அவர்களிற்கு பாகுபாடு காட்டப்படுவதாகக் கருதினர். ஒருவரின் கலாசார அடையாளத்தைப் பாதுகாக்கும் உரிமையின் கீழ் அவர்கள் விரும்பியதை அணிய சட்டப்பூர்வ பாதுகாப்பு இருக்க வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள்.

பதிலளித்த பலரில் ஊழல் எதிர்ப்பு என்பதனை, சட்டம் மற்றும் ஒழுங்கு என்ற பரந்த வகையின் கீழ் விளங்கிக் கொண்டனர். சிலர், குறிப்பாக நகர்ப்புற சமூகத்தைச் சேர்ந்தவர்கள், தேவையான சட்ட சீர்திருத்தங்கள் இல்லாத நிலையில், மோசடி மற்றும் ஊழல் செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நம்பிக்கையின்மையை வெளிப்படுத்தினர். மற்றவர்கள் 2015 இல் ஊழலுக்கு எதிரான நடவடிக்கை மிகவும் முக்கியமானது என்றும், ஆனால் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் பின்னணியில், இதன் தீவிரம் முன்பைவிட குறைவானது என்றும் கூறினர். மோசடி மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளானவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால், பொதுமக்கள் இதை பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை என்று பதிலளித்த சிலர் கருதுகின்றனர்.

மோசடி மற்றும் ஊழல் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு மிகவும் விரும்பப்பட்ட வேட்பாளர் . இளம் பதிலளிப்பவர்களிடையே இந்த அணுகுமுறை வலுவாக இருந்தது. அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி மோசடி மற்றும் ஊழலைப் பற்றி அதிகம் பேசினாலும், அதற்குப் பொறுப்பானவர்களைத் தடுக்கவும் தண்டிக்கவும் அவர்கள் போதுமானளவில் தலையிடவில்லை என்று 35 வயதுக்கு மேற்பட்டவர்களில் பெரும்பாலோர் கூறினர்.





படம் 22: சட்டத்தின் ஆட்சிக்கு முன்னுரை வழங்கல்

## தேசிய இனப்பிரச்சனை

இலங்கைத் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த பதிலளித்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் கிட்டத்தட்ட 10% தேசியப் இனப்பீரச்சினைக்கான அணுகுமுறையே வாக்களிப்பது குறித்த தீர்மானத்தில் மிகமுக்கியமான காரணியாக இருந்தது எனக்குறிப்பிட்டனர், ஏனைய அனைத்து இனச் சமூகங்களிலும் மற்ற எல்லாக் காரணிகளை விடவும் தேசிய இனப்பிரச்சினையை முதன்மைப்படுத்தியவர்களின் சதவீதம் 5% இற்கும் குறைவாகவே இருந்தது. தேசிய இனப்பிரச்சினையை முதன்மையானதாகக் கருதிய பெரும்பாலான இலங்கைத் தமிழ் சமூகம், அதற்குத் தீர்வுகாண புதிய தலைமைத்துவம் தேவை என்று நம்பினர். அவர்களின் கருத்துப்படி, காணி அபகரிப்பு பிரச்சினை மற்றும் போரின்போது ஏற்பட்ட அநீதிகள் மற்றும் குறைகளை நிவர்த்தி செய்வது தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதில் இன்றியமையாதது. இதனை நிவர்த்தி செய்ய தமது இனத்தைச் சாராத எந்தவொரு வேட்பாளரின் மீதும் நம்பிக்கை இல்லை என பலர் தெரிவித்தனர். தமிழ் வேட்பாளர் வெற்றி பெறமாட்டார் என்பது தங்களுக்குத் தெரிந்தாலும், தங்களது அனுபவத்தில் தமிழர் அல்லாத ஒருவருக்கு வாக்களிப்பது பயனற்றது என்பது தங்களுக்குத் தெரியும் என்றும் சிலர் தெரிவித்தனர். கணிசமான எண்ணிக்கையிலான நிலமற்ற மற்றும் இடம்பெயர்ந்த மக்களைக் கொண்ட சிலாவத்துறை மற்றும் ஆலங்குடாவைச் சேர்ந்த மாதிரியில் கணிசமான எண்ணிக்கையில் பதிலளித்த முஸ்லிம்கள், தேசியப் பிரச்சினைக்கான எந்தவொரு தீர்விற்கும் காணி பிரச்சினையைத் தீர்ப்பதே அடிப்படையாக இருக்கும் என்று கருதுகின்றனர். சிங்கள சமூகத்தில் பதிலளித்தவர்களில், முக்கியமாக ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் தேசியப் பிரச்சினையை முன்னுரிமையாகப் பார்க்க விரும்புவதாகத் தெரிவித்தனர் (மாதிரியில் 2% இற்கும் குறைவானவர்கள்). அவர்களின் கருத்துப்படி, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் போன்ற தேசியப் பிரச்சினைக்கான எந்தவொரு தீர்வும், எதிர்கால அநீதிகள் மற்றும் பாதிப்புகளிற்கு முகங்கொடுக்கும் சமூகப் பாதுகாப்புப் பொறிமுறையுடன் இணைந்திருக்க வேண்டும்.


தேசியப் பிரச்சினைக்கான முன்னுரிமை அனைத்து சமூகங்களுக்கிடையிலும் குறைவாக இருந்த போதிலும், பல தசாப்தங்களாக தேர்தல் பிரச்சாரத்தில் தேசிய இனப்பிரச்சினை மற்றும் தேசியவாதம் போன்றன குறைவான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கும் முதலாவது ஜனாதிபதித் தேர்தல் இது என்பது குறிப்பிடத்தக்கது. இதன் அடிப்படையில் இனப் பதட்டங்கள் முக்கிய காரணிகளாக வெளிப்படாவிட்டாலும், தேசிய இனப்பிரச்சினையின் முக்கியத்துவம் எமது சமூகத்தில் குறைந்து விட்டது என்ற முடிவுக்கு வரமுடியாது. உதாரணமாக, “எது நடந்தாலும், நாட்டைப் பிளவுபடுத்த அனுமதிக்க முடியாது” போன்ற அறிக்கைகள் சிங்களப் பதிலளித்தவர்கள் மத்தியில் அரிதாக இல்லை.




படம் 23: தேசிய பிரச்சனைக்கு முன்னுரை வழங்கல்

### குடும்பத்தின் பாரம்பரிய அரசியல் விசுவாசம்

முஸ்லிம் மற்றும் மலையக தமிழ் சமூகங்களில் (முறையே 9.5% மற்றும் 8.2%) பதிலளித்த பெரும்பாலானவர்கள் தங்களுடைய பாரம்பரிய குடும்ப விசுவாசத்தை மிக முக்கியமான காரணியாகக் கூறினர். அது முறையே சிங்கள மற்றும் இலங்கைத் தமிழ் சமூகங்களில் 6.3% மற்றும் 4.5% ஆகும். மாதிரியில் உள்ள வயதான பதிலளிப்பவர்கள் இளம் பதிலளிப்பவர்களை விட பாரம்பரிய குடும்ப அரசியல் விசுவாசத்தை தங்கள் முடிவில் தீர்க்கமான காரணியாகக் கருதினர்.




படம் 24: குடும்பத்தின் பாரம்பரிய அரசியல் விசுவாசம்

### வேட்பாளரின் இனம்

ஆய்வு செய்யப்பட்ட இன சமூகங்களில் பதிலளித்தவர்களில் வேட்பாளரின் இனத்தை மிக முக்கியமான காரணியாகக் கருதிய அதிக சதவீதத்தினர் இலங்கைத் தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் (2%). மலையகத் தமிழ் மாதிரியில் இருந்து பதிலளித்த எவரும் வாக்களிப்பதில், முடிவுகளை எடுப்பதில் வேட்பாளரின் இனத்திற்கு முன்னுரிமை அளிப்பதாகக் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களின் இன அடையாளத்தைக் கொண்ட ஒரு வேட்பாளர் நாட்டின் ஜனாதிபதியாக வருவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை உணர்ந்ததே இந்த முடிவுக்கு காரணம் என்று அவர்கள் தெரிவித்தனர். ஜனாதிபதி எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் அவர் சிங்களவராகவே இருப்பார் என அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமைய சிங்கள பௌத்தர் ஒருவரே இந்நாட்டின் ஜனாதிபதியாக வரமுடியும் என அவர்கள் நினைப்பதனால், வாக்களிக்க தீர்மானிப்பதில் இனத்தை முக்கிய காரணியாக கருதவில்லை என பதிலளித்த பெரும்பாலான சிங்களவர்கள் தெரிவித்தனர். ஜனாதிபதி சிங்கள பௌத்தராகவும் திருமணமானவராகவும் இருக்க வேண்டும் என்று சட்டம் கூறுவதாக சிலர் நம்பினர். அதன்படி, 99% இற்கும் அதிகமான பதிலளித்த சிங்களவர்கள் வேட்பாளரின் இனத்தை கருத்தில் கொள்வது பொருத்தமற்றது என்று தெரிவித்தாலும், பெரும்பான்மையான சிங்களவர்கள் மத்தியில் சிங்கள பௌத்தர் அல்லாதவர்களுக்கு ஜனாதிபதியாவதற்கு அரசியலமைப்பு தடை உள்ளது என்ற நம்பிக்கை நிலவுகின்றது.


தேர்தல் திணைக்களத்தின் தேவைக்கேற்ப வரையறுக்கப்பட்டுள்ளது

**2019, 2015 மற்றும் 2005 ஜனாதிபதித் தேர்தல்களில் மக்களின் முன்னுரிமைகள்**


2019, 2015 மற்றும் 2005 ஆகிய ஜனாதிபதித் தேர்தல்களின் போது பதிலளித்தவர்கள் அவர்களின் முடிவுகளில் தீர்க்கமான முக்கிய காரணிகளையும் இந்த ஆய்வு ஆராய்ந்தது. மேற்படி ஜனாதிபதித் தேர்தலில், ஆளும் கட்சியின் வேட்பாளர் தோற்கடிக்கப்பட்டார், மற்றொரு வேட்பாளர் பதவிக்கு வந்தார்: இந்த மாற்றம் நாட்டின் அரசியல் பாதையை பல வழிகளில் மாற்றியது. தேசிய இனப்பிரச்சினை தொடர்பான அணுகுமுறையில் மாற்றம், வெளிநாட்டு உறவுகள், உறவினர்களிற்கு தனிச்சலுகை மற்றும் மேல்மட்ட குழுவில் வியத்தகு மாற்றம் இது அதிகாரத்திற்கு நெருக்கமாகவும் அத்தோடு உயர்மட்ட அரசியல் முடிவுகளில் செல்வாக்கும் செலுத்தும்.

2024 ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் (2019, 2015 மற்றும் 2005) மக்களின் முடிவுகளைத் தீர்மானித்த முன்னணி காரணிகளை அவதானிக்கும் போது, பொருளாதார காரணிகளின் முக்கியத்துவத்தின் படிப்படியான அதிகரிப்பு ஒரு போக்காக வெளிப்பட்டது. ஆய்வு செய்யப்பட்ட அனைத்து இனக்குழுக்களிடையேயும் இந்தப் போக்கைக் காணலாம். நான்கு முக்கிய இனங்களுக்கிடையில், முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த பதிலளித்தவர்கள் வாக்களிக்கும் முடிவுகளை எடுக்கும்போது மற்ற எல்லா காரணிகளையும்விட பொருளாதாரத்தை மிகைப்படுத்துவதில் மிகக்குறைந்த சதவீதத்தை வெளிப்படுத்தினர். கடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் சட்டத்தின் ஆட்சி அல்லது தேசிய இனப்பிரச்சினையே தமது முன்னுரிமையாக இருந்ததாக முஸ்லிம் சமூகத்திலிருந்து பதிலளித்தவர்கள் சுட்டிக்காட்டினர். 2015 மற்றும் 2005 தேர்தல்களில் பதிலளித்த இலங்கைத் தமிழர்களின் முதன்மையான கவனம் தேசிய இனப்பிரச்சினையில் இருந்தது. சிங்களப் பதிலளிப்பாளர்களின் முதன்மையான அக்கறை 2005 இல் தேசிய இனப்பிரச்சினையிலிருந்து, 2015 இல் பொருளாதாரக் காரணிகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி/ஊழல்-எதிர்ப்பிற்கும் மற்றும் 2019 இல் பொருளாதாரக் காரணிகளுக்கும் மாறியுள்ளது. எனவே, தேர்தல் பேச்சுக்களின் மேலாதிக்க விளக்கவுரை ஒவ்வொரு தேர்தலும் சிங்கள சமூகத்தின் மீது செல்வாக்கு செலுத்தியுள்ளது அல்லது சிங்கள சமூகத்தின் தேவைகள் தேர்தல்களின் போது பிரபலமான ஒவ்வொரு உரைகளிலும் ஆதிக்கம் செலுத்தும் விடயம்(கள்) ஆகிவிட்டது என்று கருதலாம். மறுபுறம், மற்றய இன சமூகங்கள் தங்கள் சமூகத்தின் மீதான ஒவ்வொரு மேலாதிக்க விடயங்களினதும் பொருத்தம் மற்றும் தாக்கத்தை முதன்மையாகக் கொண்டுள்ளன: தெற்கில் தேர்தல் பிரச்சாரத்தில் தமிழர்களுக்கு எதிரான உணர்வுகள் முக்கியமாக இருக்கும் போது, இலங்கைத் தமிழர்கள் தேசிய இனப்பிரச்சனைகளின் மீது அதிக கவனம் செலுத்துகின்றனர். அத்தோடு முஸ்லிம் சமூகத்திற்கும் அதே தான் நடந்தது. எவ்வாறாயினும், தற்போதைய பொருளாதார நெருக்கடி சூழலில், வாக்களிப்பில் தீர்மானங்களை எடுப்பதில் தேசிய இனப்பிரச்சினையின் முன்னுரிமை குறைவடைந்துள்ளது, அத்தோடு பொருளாதார காரணிகள் மிகவும் தீர்க்கமானதாக வெளிப்பட்டுள்ளன. பாரம்பரியமாக, மலையகத் தமிழர்களிடையே குடும்ப கட்டுப்பாடுகள் முக்கியப் பங்கு வகித்தாலும், அது


படிப்படியாக வலுவிழந்து வருவதை தற்போதைய ஆய்வு காட்டுகிறது. 2005 முதல் 2024 வரையிலான ஜனாதிபதித் தேர்தல்களில் வாக்களிப்பதில் முடிவெடுப்பதில் தேசிய இனப்பிரச்சினையின் முக்கியத்துவம் படிப்படியாகக் குறைந்து, பொருளாதாரம் தொடர்பான பிரச்சினைகளின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளதை தற்போதைய ஆய்வு வெளிப்படுத்தியுள்ள நிலையில், இது மேலும் ஆழமாக ஆராயப்படல் வேண்டும்.




படம் 25: 2019 இல் தீர்மானிப்பதில் முன்னுரிமை





படம் 26: 2015 இல் தீர்மானிப்பதில் முன்னுரிமை





படம் 27: 2005 இல் தீர்மானிப்பதில் முன்னுரிமை


அவர்களின் அபிலாஷைகளுக்கு எந்த வேட்பாளர் பொருத்தமானவர்கள் என அவர்கள் எப்படி தீர்மானிக்கிறார்கள் என்று கேட்கப்பட்டபோது, பெரும்பான்மையானவர்கள் அவர்களின் அடிப்படை தகவல் மூலம் ஊடகங்கள் (சிங்களவர்கள் - 55%, இலங்கைத் தமிழர் - 48%, முஸ்லிம் - 41% மற்றும் மலையகத்தமிழர் - 29%) என்று பதிலளித்தனர். மிகமுக்கியமான அடுத்த தகவல் மூலம் அவர்களின் சமூக வலையமைப்புகள் (பணியிடங்கள், தொழிற்சங்கங்கள், கிராம சங்கங்கள், நலன்புரி சங்கங்கள், மத சங்கங்கள்). தங்கள் சமூக வலையமைப்புகள் மூலம் பெறும் தகவல்களில் பிரதானமாக தங்கியுள்ளனர் என 25% முஸ்லிம்களும், 23% மலையகத் தமிழர்களும், 22% இலங்கைத் தமிழர்களும், 13% சிங்களவர்களும் தெரிவித்தனர். மலையக தமிழ் மாதிரியில் 27% பேர் தங்கள் குடும்பம் மற்றும் நெருங்கிய குடும்ப வலையமைப்புகள் மூலம் பெறும் தகவல்கள் அதிக செல்வாக்கு செலுத்துவதாக கூறியுள்ளனர். சிங்களவர் மாதிரியில் இது 18% ஆகவும், முஸ்லிம் மாதிரியில் 17% ஆகவும், இலங்கைத் தமிழர் மாதிரியில் மிகவும் குறைவாக 12% ஆக இருந்தது.





படம் 28: அடிப்படை தகவல் ஆதாரம் (சிங்களம்)




படம் 29: அடிப்படை தகவல் ஆதாரம் (இலங்கைத் தமிழ்)





படம் 30: அடிப்படை தகவல் ஆதாரம் (முஸ்லிம்)





படம் 31: அடிப்படை தகவல் ஆதாரம் (மலையகத் தமிழ்)


இறுதியாக, ஒவ்வொரு இன மாதிரியின் பதிலளிப்பவர்களிடமும் தங்களுக்கு விருப்பமான வேட்பாளர் தேர்தலில் வெற்றி பெற்று அவர்களின் அபிலாஷைகளுக்கு துரோகம் செய்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்கப்பட்டது. இலங்கைத் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த பதிலளித்தவர்களைத் தவிர அனைத்து இனக்குழுக்களிலும் பெரும்பான்மையினர், அதிகாரத்தில் இருந்து விலக்குவதற்கு அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரை காத்திருப்போம் என்று கூறினர் (சிங்களவர்கள் - 35.6%, முஸ்லிம்கள் 36.1%, மற்றும் மலையகத் தமிழர் - 54.2%). இலங்கைத் தமிழர் மாதிரி பதிலளித்தவர்களில் பெரும்பாலானோர், அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்காகக் காத்திருப்பதற்குப் பதிலாக, தமது அதிருப்தியை வெளிப்படுத்த எதிர்வரும் அனைத்துத் தேர்தல்களிலும் அவரது கட்சிக்கு எதிராக வாக்களிப்பார்கள் எனக்கூறினர். அனைத்து இன மாதிரிகளிலும் பதிலளித்தவர்களில் 9% இற்கும் குறைவானவர்கள் பொதுப் போராட்டங்களுக்குச் செல்வதாகக் கூறினர். மக்கள் போராட்டங்கள் மூலம் ஜனாதிபதி பதவி கவிழ்க்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்தும் மக்கள் போராட்டங்களில் ஈடுபட விரும்பாதது சுவாரஸ்யமாக உள்ளது. ஒவ்வொரு மாதிரியின் கணிசமான விகிதத்தினர் தமது அபிலாஷைகளுக்கு துரோகம் நடந்தால் எவ்வாறு பதிலளிப்பது என்று தெரியவில்லை என்று வெளிப்படுத்தினர் (சிங்களவர்கள் - 29.2%, இலங்கைத் தமிழர் - 25%, முஸ்லிம் - 29.8%, மற்றும் மலையகத் தமிழர் - 25%).





படம் 32: வாக்குறுதிகளை மீறுவதற்கான பதில் (சிங்களவர்கள்)




படம் 33: வாக்குறுதிகளை மீறுவதற்கான பதில் (இலங்கைத் தமிழ்)




படம் 34: வாக்குறுதிகளைக் மீறுவதற்கான பதில் (முஸ்லிம்)




படம் 35: வாக்குறுதிகளை மீறுவதற்கான பதில் (மலையகத் தமிழ்)

## முடிவுரை

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல், அரகலயவுக்குப் பின்னர், பிரதிநிதித்துவ ஜனநாயகக் கட்டமைப்பிற்குள் மக்கள் தமது குரலை வெளிப்படுத்தும் முதல் தேர்தலாகும். மறுபுறம், எப்போதும் போல், ஜனாதிபதித் தேர்தல்களின் முடிவுகள் நாட்டின் அரசியலில் அதிக செல்வாக்கு செலுத்துகின்றன. இந்நிலையில், அனைத்து இன சமூகங்களிலும் பெரும்பான்மையான வாக்காளர்கள் வாக்களிப்பதில் ஆர்வத்தை வெளிப்படுத்துவது ஆச்சரியமளிக்கவில்லை. தற்போதைய ஆய்வின் முடிவுகளின்படி, பெரும்பான்மையான சிங்களவர்கள் [redacted] ஆதரவாக உள்ளனர், அவர்களில் பெரும்பான்மையானவர்கள் 35 வயதுக்குட்பட்ட இளம் வாக்காளர்கள். அவர் முஸ்லிம் சமூகத்தினரிடையே ஏனைய வேட்பாளர்களை விட மிகவும் பிரபலமானவர். சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகங்களில் உள்ள பழைய வாக்காளர்கள் மத்தியில் [redacted] மிகவும் பிரபலமானவர்.

எவ்வாறாயினும், ஒட்டுமொத்த விருப்பத்தின் அடிப்படையில், முஸ்லிம்கள் மத்தியில் [redacted] விட [redacted] முன்னிலையில் உள்ளார். [redacted] இலங்கைத் தமிழர்கள் மற்றும் மலையகத் தமிழர்கள் மத்தியில் மிகவும் பிரபலமான வேட்பாளர். [redacted] இரண்டாவது விருப்பமான வேட்பாளர். மேலும், இரு சமூகங்களிலும் உள்ள வயோதிப வாக்காளர்கள் மத்தியில் [redacted] மிகவும் பிரபலமானவர். நான்கு இன மாதிரிகளிலும், பதிலளித்தவர்களில் கணிசமான பகுதியினர் தாங்கள் வாக்களிக்கும் வேட்பாளரை முடிவு செய்யாததாலும், மற்றொரு கணிசமான விகிதாச்சாரம் தங்கள் விருப்பத்தைப் பகிர்ந்து கொள்ள விரும்பாததாலும், கணக்கெடுப்பு முடிவு இந்த ஆய்வில் எடுக்கப்பட்ட 60% சிங்கள சமூகத்தின், 45% இலங்கைத் தமிழ் சமூகத்தின், 60% முஸ்லிம் சமூகம் மற்றும் 55% மலையகத் தமிழ் சமூகத்தின் விருப்பங்களை மட்டுமே காட்டுகிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல்களுடன் ஒப்பிடும் போது, அனைத்து இனங்களின் வாக்காளர்கள் மத்தியில் தமது தெரிவுக்கான முதன்மையான கருத்தாக பொருளாதார காரணிகள் மாறியுள்ளன. பல்வேறு இனங்கள், துறைகள் மற்றும் கிராமங்களுக்கிடையே முக்கியமான பொருளாதார காரணியை விளங்கிக் கொள்ளவதில் வேறுபாடுகள் உள்ளது. அவை பொருட்களின் விலை, நலன்புரி மற்றும் சமூகப் பாதுகாப்பு முதல் விவசாய உதவி, வரி குறைப்பு மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்குதல் வரை வேறுபடுகின்றன. மற்ற இன சமூகங்களுடன் ஒப்பிடுகையில், முஸ்லிம்களில் கணிசமான பகுதியினர், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்குப் பிறகு, அவர்களில் பலர் தங்கள் அனுபவத்துடன் இணைத்துள்ள சட்டத்தின் முக்கியத்துவத்திற்கு (பொருளாதார காரணிகளுக்குப் பின்னர்) முன்னுரிமை அளித்துள்ளனர். தேசிய இனப்பிரச்சினையில் இலங்கைத் தமிழர்களால் அதிக அக்கறை வெளிப்படுத்தப்பட்டது (ஆனால் பொருளாதார காரணிகளுக்கு மிகவும் இரண்டாம் பட்சமானது), மேலும் அது நில அபகரிப்பு மற்றும் போருக்குப் பிந்தைய ஏனைய குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை உள்ளடக்கியது. முஸ்லிம்களில் ஒரு குறிப்பிட்ட பகுதியினர் (குறிப்பாக 1990 இல் வடக்கில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள்) மற்றும் ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்புகளில் பாதிக்கப்பட்டவர்கள் (சிங்களவர்கள்) தேசியப் இனப்பிரச்சினையின் கீழ் தங்கள் கவனத்தை ஏற்படுத்தினர், இது பிரச்சினையின் பன்முகத்தன்மையைக் காட்டுகிறது. மற்ற இனங்களை விட மலையக தமிழ் சமூகத்தினரிடையே குடும்பத்தின் அரசியல் விசுவாசம் பெருமளவில் ஒரு முக்கியமான காரணியாக இருந்தது.

வேட்பாளரின் இனம் என்பது முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழர்களால் மிகக்குறைந்த முன்னுரிமை அளிக்கப்பட்ட காரணியாகும் அதே நேரத்தில், இலங்கைத் தமிழர்கள் இன மாதிரிகளில் வேட்பாளரின் இனத்தை முதன்மைப்படுத்துவதில் அதிக சதவீதத்தை காட்டியுள்ளனர், இருப்பினும் இது மற்ற காரணிகளுடன் ஒப்பிடுகையில் குறைவாகவே இருந்தது. நாட்டின் சட்டத்தின்படி சிங்கள-பௌத்தர் மட்டுமே நாட்டின் ஜனாதிபதியாக வரமுடியும் என நம்புவதால், பெரும்பான்மையான சிங்களவர்கள், வேட்பாளரின் இனத்தை கருத்தில் கொள்வது தேவையற்றது என்று நினைத்தனர்.

2019, 2015 மற்றும் 2005 தேர்தல்களுடன் ஒப்பிடுகையில், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான விடயத்தில் தேசிய இனப்பிரச்சினையின் முக்கியத்துவத்தில் ஒரு வீழ்ச்சியை அவதானிக்கலாம். அதே சமயம், முஸ்லிம்கள் மற்றும் சிங்களவர்களின் மனக்குறைகள் (குறிப்பாக ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்குப் பிறகு) முன்னர் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட, தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு புதிய பரிமாணத்தைச் சேர்த்துள்ளன, இதில் தேசிய இனப்பிரச்சினைக்கு, தற்போதைய சூழலில், பொருளாதாரம், சட்டம் மற்றும் ஒழுங்கு மற்றும் அடையாளம் தொடர்பான அனைத்து இன சமூகங்களின் பல்வேறு கவலைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, வருங்கால அரசாங்கம் இந்தப் பல்வேறு பரிமாணங்களை உள்ளடக்கி, ஒரு தேசத்தைக் கட்டியெழுப்பும் செயல்முறைக்குள் அனைத்து சமூகங்களின் குறைகளையும் நிவர்த்தி செய்ய வேண்டும். பாரம்பரிய குடும்ப விசுவாசத்தை படிப்படியாக பலவீனப்படுத்துவதன் முக்கியத்துவம் எதிர்காலத்திற்கான நம்பிக்கைக்குரிய ஒரு அம்சமாகும்.

வாக்காளர்கள் வாக்களிப்பதில் தங்கள் முடிவுகளை எடுப்பதற்கான மூலகாரணம் ஊடகங்கள். எனவே, பாரபட்சமற்ற தகவல்களின் அடிப்படையில் தகவலறிந்த வாக்காளர்கள் முடிவெடுக்கக்கூடிய சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கு ஊடகங்களின் பங்கு முக்கியமானது. அரசு மற்றும் தனியார் ஊடகங்களின் பக்கச்சார்பான செய்திகளுக்காக ஏராளமான குற்றச்சாட்டுகள் இருப்பதால் இது விவாதத்திற்குரியதாகிறது. சமீபத்தில், குறிப்பிட்ட வேட்பாளர்கள் மீது அவதூறான கருத்துகள் மற்றும் ஊடக நெறிமுறைகளுக்கு முரணான நடத்தைக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களை விமர்சித்ததற்காக சில ஊடக நிலையங்களுக்கு தேர்தல் ஆணையம் எச்சரிக்கைகளை வழங்கியது. முடிவெடுப்பதற்கான முதன்மையான செல்வாக்கின் அடிப்படைக் காராணியான சமூக வலையமைப்புகளில் தங்கியிருப்பது மற்ற இன சமூகங்களைவிட சிங்களவர்களிடையே குறைவாக இருந்தது. மற்றவர்களுடன் ஒப்பிடும்போது குடும்ப வலையமைப்பின் மூலம் பெறப்பட்ட தகவல்களின் முக்கியத்துவம் மலையக தமிழ் சமூகத்தினரிடையே அதிகமாக இருந்தது.

அனைத்து இன சமூகங்களிலும் உள்ள பதிலளித்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளரின் தேர்தல் வாக்குறுதி மீறல்களிற்கு எதிராக பகிரங்கமாக எதிர்ப்பு தெரிவிப்பதற்கான விருப்பத்தை கருத்தில் கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது. அதற்கு பதிலாக, பெரும்பான்மையானவர்கள் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் அல்லது பிற தேர்தல்கள் பதிலளிப்பதற்காக காத்திருக்கத் தெரிவு செய்கிறார்கள். இருப்பினும், அத்தகைய சூழ்நிலையில் அனைத்து சமூகங்களிலும் பதிலளித்தவர்களில் சுமார் 25% பேர் ஒரு அரசியல் பதிலை கற்பனை செய்ய இயலாமையை வெளிப்படுத்தினர். அரகலய காலத்தில் காட்டப்பட்ட மக்களின் அரசியல் உணர்வை மாற்றும் யோசனைக்கு இது சவாலானது. அதற்கேற்ப அரகலயவின் பின்னரான மக்களின் அரசியல் உணர்வு மேலும் ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒரு பகுதி ஆகும்.

2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல், அரகலயவிற்கு பின்னரான முதலாவது தேர்தலாகவும், மக்கள் ஆணையுடன் முறையான ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாய்ப்பாகவும் அமைகிறது. மறுபுறம், தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் தங்களின் பல்வேறு பொருளாதார விடயங்களை நிவர்த்தி செய்வார் என்று மக்கள் அதிக நம்பிக்கை கொண்டுள்ளனர். இந்த நம்பிக்கைகள் குறுகியகால பொருளாதார நலன்களுக்கு மட்டுப்படுத்தப்படவில்லை, இது நலன்புரி மற்றும் வாழ்க்கைச் செலவுகளைக் குறைப்பதன் மூலம் செயல்படுத்தப்படலாம். மக்கள் தங்கள் பொருளாதார மற்றும் அரசியல் எதிர்காலத்திற்கான பரந்த, தொலைநோக்கு மற்றும் நீண்டகால அபிலாஷைகளைக் கொண்டுள்ளனர். பொருளாதார விடயத்தில் மூழ்கியிருந்தாலும், இனக் குமுறல்களும், தேசியவாதமும் நலிவடையவில்லை, தேசத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய தேவை அத்தியாவசியமானது. அதேசமயம், மக்கள் சட்டத்தின் ஆட்சி அமைய வேண்டும் என்று ஏங்குகின்றனர். எனவே, தற்போதைய “இருமுனை, மும்முனை போட்டியில்” வெற்றிபெறும் வேட்பாளரிடம் எதிர்பார்ப்பு அதிகமாக உள்ளது.

“

இலங்கை குடியரசில் இறைமை
மக்களுக்குரியதாகவும் பராதீனப்படுத்த
முடியாததாகவும் இருக்கும். இறைமை என்பது
ஆட்சித்தத்துவங்கள், அடிப்படை உரிமைகள்,
வாக்குரிமை ஆகியவற்றை உள்ளடக்கும்.

3 வது அரசியலைமைப்பு, இலங்கை சனநாயக
சோசலிச குடியரசின் அரசியலமைப்பு

”

LAW & SOCIETY TRUST
නීතිය හා සමාජ භාරය
சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை

Law & Society Trust
3, Kynsey Terrace,
Colombo 8, Sri Lanka.
www.lstlanka.org

9 786245 545292
ISBN 978-624-5545-29-2